கேரளப் பாடநூல்

# தமிழ்

## வகுப்பு IV

பகுதி - 2

**Kerala Reader - Tamil**

**Standard IV**

**Part 2**

கேரள அரசு
கல்வித்துறை

தயாரிப்பு
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்
2015

JT 475-1/Tamil-4 (Vol-II)

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காகே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
ஜய ஜய ஜய ஜய ஹே!

*- மகாகவி இரவீந்திரநாத் தாகூர்*

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன்பிறந்தோர்.

எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமைகொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்துகொள்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.

எல்லாருடனும் நான் பண்புடன் பழகுவேன். எனது நாட்டினிடமும் நாட்டு மக்களிடமும் பக்தியுடன் இருப்பேன் என உறுதி கூறுகிறேன். அவர்களின் நலத்திலும் வளத்திலும்தான் எனது இன்பமும் அடங்கியிருக்கிறது.

---

**Prepared by** :
State Council of Educational Research and Training (SCERT)
Poojappura, Thiruvananthapuram - 695 012, Kerala
*Website:* www.scertkerala.gov.in
*e-mail:* scertkerala@asianetindia.com
Phone : 0471 - 2341883, Fax: 0471 - 2341869
*First Edition*: 2015
*Type setting*: SCERT Computer Lab

© Government of Kerala • Department of Education

**அன்புக் குழந்தைகளே!**

அமிழ்தினும் இனியது நம் தமிழ்மொழி. அது நம் தாய்மொழியுமாம். மனிதனைப் பிற உயிரினங்களிடமிருந்து வேறுபடுத்துவது மொழி. எந்தக் கல்வியாக இருந்தாலும் அதற்கு அடிப்படையாக இருப்பது மொழியே. மொழியில்லையேல் சிந்தனை வளர்ச்சி இல்லை. எனவே மொழிக்கல்வி இன்றியமையாத ஒன்றாக அமைகின்றது. பல்வேறு சிற்றோடைகள் ஒன்றாக இணைந்து ஒரு பேராறாக மாறுவது போல, மொழியும் காலந்தோறும் புதுப்புது சொற்களையும் சொற்றொடர்களையும் பெற்று வளரும் தன்மை கொண்டது. மொழி ஒன்றேயாயினும் அதனைக் கையாள்பவரின் திறனுக்கேற்ப அழகும் ஆற்றலும் பெறும். இந்நிலையில் பழையதும் புதியதுமான படைப்புகள் இப்புத்தகத்தில் இடம்பெறுகின்றன. குழந்தைகள் தவறின்றி எழுதுவதற்கும் உச்சரிப்புத் தெளிவோடு பேசுவதற்கும் வழிவகுக்கும் வகையில் செயல்பாடுகள் அமைகின்றன. நான்காவது வகுப்புக் குழந்தைகள் அடைய வேண்டிய மொழித்திறன்களைக் கருத்தில் கொண்டு இப்பாடப்புத்தகம் வடிவமைக்கப்பட்டுள்ளது. பாடப்பகுதிகளை வாசித்தும், எழுதியும் சிந்தித்தும் செயல்பட்டும் வளர்ச்சியடைவோம்.

வாழ்த்துகளுடன்,


**முனைவர் எஸ். இரவீந்திரன் நாயர்**
இயக்குநர்
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்
திருவனந்தபுரம்

# Textbook Development Committee

## Tamil - IV (Part - 2)

***Members***

Christhudas, C., Govt. LPS, Glenmary, Idukki.

Elango, S., Govt.UPS, Elappara, Idukki.

Gnanajayaseelan, G., ALPS, Rajamallay, Idukki.

Jayalakshmi, S., Govt. Model HS.LPS, Thycaud, TVPM.

Kumaran, T., GLPS, Kottamallay, Idukki.

Mathiazhagan, P., GUPS, Vannamadai, Palakkad.

Pushparaj, G., ALPS, Yellapetti, Idukki.

Ragu, M., St.Sebastin's HSS, Cheenthalar, Idukki.

Russelraj, R., ALPS, Pullivasal, Idukki.

***Experts***

Dr. Gomathy Nayagam, E., Guest Lr. University of Madras, Chennai.

Dr. Karthikeyan, A., Prof., (Rtd.), Tamil University, Thanjavur.

Dr. Nainar. M., Reader., (Rtd.), University College, Thiruvananthapuram.

Dr. Parasuraman, T., Prof., PILC, Pondichery.

Dr. Rajaram, S., Prof.,(Rtd.), Tamil University, Thanjavur.

Dr. Ratnasabapathy, P., Prof.(Rtd.), Chennai.

Dr. Sethupandian, T., Prof., (Rtd.), M.K.University. Madurai.

Dr. Veerappan, P., Prof., (Rtd.), NCERT, Mysore.

***Artists***

Nanthakumar, Attampathy. Palakkad.

Radha Krishnan, P., Neyardam. TVPM.

Subin, M.S. Nedumangadu. TVPM.

***Academic Co-ordinator***

Dr. Sahaya Dhas, D, Research Officer, SCERT.

**State Council of Educational Research and Training(SCERT)**
Poojappura, Thiruvananthapuram - 695 012.

# பொருளடக்கம்


பக்கம்

6. முத்தமிழே, வாழி! ........ 99 - 110
- பொதுமறை ........ 100
- நல்வழி ........ 102
- சுடுசொல் ........ 104
- காலும் காடையும் ........ 108

7. உல்லாசப் பறவைகள் ........ 111 - 128
- சர்க்கஸ் ........ 112
- பல்லுக்கும் நாக்குக்கும் சண்டை ........ 114
- சிரிப்பின் காரணம் ........ 119
- பச்சைப்புல் மேடுகள் ........ 122

8. அமைதிப் பூங்கா ........ 129 - 146
- குண்டு ........ 130
- நயம்பட உரை ........ 134
- செஞ்சிலுவைக்கு ஒரு வணக்கம் ........ 138
- மலர்விழியின் மனசு ........ 141

9. ஒரு தாய் மக்கள் ........ 147 - 163
- இது மனித சாதி ........ 148
- ஏற்றத்தாழ்வற்ற சமுதாயம் ........ 150
- பெண்ணுரிமை ........ 154
- உயர்வும் தாழ்வும் ........ 157

சொல்லகராதி ........ 164

# 6

# முத்தமிழே, வாழ்!



தமிழ்மொழி மிகத் தொன்மையானது.
அது செம்மொழி எனப் போற்றப்படுகிறது. முச்சங்கங்களால்
அது வளம் பெற்றது. அம்மொழியின் தொன்மைச்சிறப்பை அறிவதுடன்
மொழியைக் கையாளும் திறனும் மொழிக்கூறுகளை அறியும் திறனும்
குழந்தைகள் அடைய வேண்டும் என்னும் கருத்துடன் இவ்வலகு
அமைகிறது.

## முதன்மைக் கற்றல் அடைவுகள்

- செய்யுள் பகுதிகளை முறையான ஒலிப்புடனும் உச்சரிப்புடனும் ஏற்ற இறக்கத்துடன் இயல்பாக வாசிக்கிறார்கள்.
- பொருத்தமான சொற்களைப் பயன்படுத்திப் பொருள் பொதிந்த தொடர்களை உருவாக்குகிறார்கள்.
- சூழலுக்கேற்பப் பொருத்தமான மரபுச் சொற்களைத் தமது படைப்புகளில் பயன்படுத்துகிறார்கள்.
- தமிழ் மொழியின் சிறப்பு, தொன்மைக் கூறுகளை அறிந்து பல்வேறு மொழிச்செயல்பாடுகளில் ஈடுபடுகிறார்கள்.

# பொதுமறை

தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு.

செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை.

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற்று எல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

## செயல்பாடுகள்

**பாடல் வரிகளுக்கேற்ற குறளைக் கண்டுபிடியுங்கள்**

- உணவை அளிப்பான் விவசாயி
  உலகுக் கவனே அச்சாணி.
- நெஞ்சில் தைக்கும் சுடு சொற்கள்
  என்றும் மனதில் மாயாது.
- சொல்லும் சொற்களை ஆராய்ந்து
  முடிவுக்கு வருவதே அறிவுடைமை.
- செல்வங்கள் பலவும் உண்டிங்கே
  செவி வழிச் செல்வம் சிறப்பன்றோ.



**இறுதி எழுத்து 'மை' என்று முடியும் சொற்களை எழுதுங்கள்.**

**எ.கா. :**

| | |
|---|---|
| கடமை | _ _ _ _ _ _ |
| _ _ _ _ _ _ | _ _ _ _ _ _ |
| _ _ _ _ _ _ | _ _ _ _ _ _ |
| _ _ _ _ _ _ | _ _ _ _ _ _ |

**தொடரிலுள்ள சொற்களைக் கண்டுபிடியுங்கள்.**

**எ.கா. :**

| | | | |
|---|---|---|---|
| செவிச்செல்வம் | - | செவி | செல்வம் |
| மெய்ப்பொருள் | - | _ _ _ _, | _ _ _ _ |
| எப்பொருள் | - | _ _ _ _, | _ _ _ _ |
| அப்பொருள் | - | _ _ _ _, | _ _ _ _ |
| இப்பொருள் | - | _ _ _ _, | _ _ _ _ |

JT 475-2/Tamil-4 (Vol-II)



# நல்வழி

**வள்ளலுக்கு யாவரும் உறவினர்**

மரம் பழுத்தால் வெளவாலை வா என்று கூவி
இரந்தழைப்பார் யாவரும் அங்கில்லை - சுரந்தமுதம்
கற்றா தரல்போல் கரவாது அளிப்பரேல்
உற்றார் உலகத் தவர்

**வன்சொல்லும் இன்சொல்லும்**

வெட்டனவை மெத்தனவை வெல்லாவாம் வேழத்தில்
பட்டுருவும் கோல்பஞ்சில் பாயாது - நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்
வேருக்கு நெக்கு விடும்

- ஔவையார்

**பொருள் அறிந்துகொள்ளுங்கள்**

- *மரத்திலுள்ள பழங்களை உண்ண வாருங்கள் என்று வெளவாலை யாரும் கூவி அழைப்பதில்லை. பசு தனது கன்றுக்குப் பாலைச்சுரந்து கொடுப்பது போல, தன்னிடம் இருப்பதை மறைக்காமல் கொடுப்பவர்க்கு உலகத்தார் அனைவரும் சுற்றத்தினர் ஆவார்.*
- *யானைமீது பாயும் அம்பு பஞ்சு மூட்டையில் பாயாது.கடப்பாரையால் பிளக்க முடியாத பாறை பசுமரத்தின் வேர் செல்ல இடம் கொடுக்கும், அதுபோல, கடுஞ்சொற்களால் சாதிக்க இயலாததை இனிய சொற்களால் சாதிக்க முடியும்.*

## செயல்பாடுகள்

**சரியான ஒலிப்புடன் வாசியுங்கள்; பொருள் வேறுபாடு கூறுங்கள்.**

- பழுத்தால் - பருத்தால்
- பாறை - பாரை
- குவியல் - குளியல்
- இரந்து - இறந்து
- அழித்து - அளித்து
- மரம் - மறம்
- தலை - தளை

**கட்டங்களில் பொருத்தமான எழுத்துகள் எழுதிச் சொற்கள் அமையுங்கள்.**

| | | | | |
|---|---|---|---|---|
| | செ | | | |
| | வி | | | |
| | ச் | | | |
| | செ | ங் | க | ல் |
| | ல் | | | |
| | வ | | | |
| | ம் | | | |

**'போல' என்ற சொல்லைப் பயன்படுத்தி வாக்கியம் அமையுங்கள்.**

**எ.கா. :** பசு கன்றுக்குப் பால் தருவது போல தன்னிடம் இருப்பதைப் பிறருக்கு மறைக்காமல் கொடுக்கின்றவர்கள் சான்றோர்கள்.

- வட்டமான தட்டு - வானத்தில் வெண்ணிலா தோன்றுகிறது.
- பஞ்சுக் குவியல் - வெண்மேகக் கூட்டங்கள் காணப்படுகின்றன.
- வட்டமிடும் கழுகு - வானத்தில் ஆகாய விமானம் பறக்கின்றது.

# சுடுசொல்

ஓர் ஊரில் சிறுவன் ஒருவன் இருந்தான். அவன் அடிக்கடி கோபங் கொள்பவன். இதைக் கவனித்த அவனது தந்தை, அவனது கோபத்தை அடக்குவதற்காக ஒரு திட்டம் போட்டார்.

ஒரு நாள் அவனிடம் ஒரு பை நிறைய ஆணிகளைக் கொடுத்தார். அவனுக்கு என்ன ஏது என்று ஒன்றும் புரியவில்லை.

அவன் தன் தந்தையைப் பார்த்து, 'எதற்கப்பா இத்தனை ஆணிகள்! இதை வைத்து நான் என்ன செய்ய வேண்டும்' என்று கேட்டான்.

அதற்கு அவனது தந்தை, 'மகனே, இதோ உன்னிடம் ஆணிகள் உள்ளன. இந்தச் சுத்தியலையும் வைத்துக் கொள். உனக்கு எப்பொழுதெல்லாம் கோபம் வருகிறதோ, அப்பொழுதெல்லாம் இந்த ஆணிகளில் ஒன்றை எடுத்துச் சுவரில் அடித்து விடு. இதை மட்டும் நீ செய்தால் போதும்' என்று கூறினார்.

அந்தச் சிறுவன் முதல் நாளே முப்பத்திரண்டு ஆணிகளைச் சுவரில் அடித்து விட்டான். நாளாக நாளாகச் சுவர்களில் அடிக்கப்படும் ஆணிகளின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வந்தது. அதாவது, அந்தச் சிறுவனின் கோபம் தணிந்து கொண்டே வந்தது. இறுதியில், ஆணி அடிப்பதை நிறுத்தி விட்டான். கோபத்தை அடக்கக் கற்றுக் கொண்டான்



ஒரு வாரம் கழிந்தது. அவன் தந்தையிடம் சென்று, தான் கோபத்தை அடக்கக் கற்று கொண்டு விட்டதாகக் கூறினான். சுவரில் அடித்த ஆணிகளை ஒவ்வொன்றாகப் பிடுங்கி எடுக்குமாறு கூறினார் தந்தை. அவனும் தன் தந்தை சொல்லியபடியே சுவரிலிருந்து ஆணிகளைப் பிடுங்கி எடுத்தான்.

பின்னர் தந்தை தன் மகனைப் பார்த்து, 'மகனே நீ உன் கோபத்தை அடக்கக் கற்றுக்கொண்டாய். மிக்க மகிழ்ச்சி. ஆனால் கோபத்தினால் ஏற்படும் விளைவுகளை எண்ணிப்பார். ஆணிகளைச் சுவரில் அடிப்பதும் அதைபிடுங்கி எறிவதும் மிகச் சுலபம். இங்கே பார் சுவரெல்லாம் துளைகள். துளைகள் இல்லாத பழைய சுவரை உன்னால் உருவாக்க முடியுமா? முடியாது. அதுபோன்றே கோபத்தால் வெளிப்படும் சுடுசொல், பிறரது மனதில் தீராத வடுக்களை உண்டாக்கிவிடும். அதை ஒரு போதும் அகற்றவே முடியாது. சுடுசொல் நீக்கி, இன்சொல்லை நீ பயன்படுத்து. அதுவே உன்னை உயர்த்தும்' என்று அறிவுரை கூறினார்.




## செயல்பாடுகள்

- உங்களுக்குக் கோபம் வரும்போது என்னென்ன செயல்களை நீங்கள் செய்வீர்கள்? கூறுங்கள்.

- உங்கள் நண்பன் ஒருவன் மிகக் கோபமடைகிறான். அவனது கோபத்தைப் போக்க நீங்கள் என்னென்ன வழிமுறைகளைக் கையாள்வீர்கள்? கூறுங்கள்.

- ஒரு / ஓர் வேறுபாடு அறிந்து கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களிலிருந்து தேர்ந்தெடுத்து எழுதுங்கள்.




| | | |
|---|---|---|
| குரங்கு | அரசன் | ஏணி |
| சேவல் | ஒட்டகம் | முயல் |
| குயில் | உழவன் | சிங்கம் |


- **சொற்களைப் பயன்படுத்திப் பொருத்தமானத் தொடர்கள் எழுதுங்கள்.**

  - சுத்தியல், ஆணி _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _
  - சுவர், துளை _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _
  - தோட்டம், மலர் _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _
  - தந்தை, மகன் _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

# குறளும் பாட்டும்

## விருந்தோம்பல்

வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று




தொடர்ந்து தினம் வருவோரை
அன்பால் நேசிக்கும் மனமிருந்தால்
துன்பம் தொல்லை வருவதில்லை
வாழ்வு பாழ்பட்டுப் போவதில்லை.

## அறன் வலியுறுத்தல்

ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும் வாயெல்லாம் செயல்


நன்மை செய்தும் குறை சொல்லும்
நபரை எண்ணித் தயங்காதே.
முடிந்த வரையில் நன்மை செய்.
அமைதி தந்திடும் அறச்செயல்.



# காலும் காடையும்

தன் நண்பருடன் புலவர் ஒருவர் கடைத்தெரு வழியாகச் சென்று கொண்டிருந்தார். நண்பருக்கோ பசியாக இருந்தது. அருகில் இருந்த உணவு விடுதியைப் பார்த்தார். புலவரிடம், அந்தக் கடையில் தேனீர் சாப்பிட்டு வருவோமா என்றார்.

கடை நடுவில் காலை வைத்தால் என்னவாகும் தெரியுமா? என்று கேட்டார் புலவர். நண்பருக்கோ புலவர் கேட்ட கேள்விக்குப் பொருள் புரியவில்லை. சிறிது நேரம் கழித்து, கடைக்குள் காலை வைத்தால் பாக்கெட்தான் காலியாகும் என்றார் நண்பர். புலவரும் சிரித்துக் கொண்டே, அது இல்லை நண்பரே, கடைநடுவில் காலை வைத்தால் பறந்துதான் போகும் என்றார். நண்பருக்கு ஒன்றும் புரிய வில்லை.



கடைக்குள் காலை வைத்தால் என்ன பறக்கும்?

கடை என்ற வார்த்தையின் இடையில் கால் என்ற துணை எழுத்தைச் சேர்த்தால் (ா) கடை என்பது காடை என்றுதானே ஆகும் என்றார் புலவர்.

அப்படியென்றால் காடை பறக்கத்தான் செய்யும் என்று நண்பர் புரிந்து கொண்டார். புலவரின் புலமையைப் பாராட்டி மகிழ்ந்தார்.

## ஆசிரியர் குறிப்பு :



புனைப்பெயர் : புதுமைப்பித்தன்

இயற்பெயர் : சொ.விருத்தாச்சலம் (1906 - 1948)

தமிழ்ச் சிறுகதை உலகுக்குப் புதிய பாதையை வகுத்துத் தந்தவர் என்ற பெருமைக்குரியவர்.

இருநூறுக்கும் மேற்பட்ட சிறு கதைகள் படைத்துள்ளார்.

சமூகச் சீரழிவுகளைச் சுட்டிக் காட்டுவது இவரது தனித்தன்மை.

அங்கதச் சுவையுடன் கதை சொல்வதில் வல்லவர்.

கயிற்றரவு, சாப விமோசனம், சிற்பியின் நரகம், நினைவுப் பாதை, ஞானக்குகை, கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும், காலனும் கிழவியும், பொன்னகரம் போன்றவை இவரது முக்கியமான கதைகள்.

குறுநாவல், ஓரங்க நாடகம், புதுக்கவிதைகள், கட்டுரைகள் பலவும் எழுதியுள்ளார்.



## செயல்பாடுகள்

**பொருத்தமான சொல்லை எடுத்து எழுதுங்கள்.**

- மலர்விழி அல்வா _ _ _ _ _ _ _ (விழுங்கினாள்/உண்டாள்)
- எழிலன் பால் _ _ _ _ _ _ _ (தின்றான்/பருகினான்)
- பாத்திமா பழம் _ _ _ _ _ _ _ (தின்றாள்/விழுங்கினாள்)
- எழிலரசி மாத்திரை _ _ _ _ _ _ _ (பருகினாள்/ விழுங்கினாள்)
- அலெக்ஸ் தண்ணீர் _ _ _ _ _ _ _ (தின்றான்/ குடித்தான்)

**பொருத்தமான சொல்லை எழுதுங்கள்**

- தோட்டத்தில் மலர்கள் _ _ _ _ _ _ _
- தென்றல் காற்று _ _ _ _ _ _ _
- வானத்தில் நிலவு _ _ _ _ _ _ _
- காலைப் பொழுது _ _ _ _ _ _ _
- பூக்களிலிருந்து தேன் _ _ _ _ _ _ _

**(புலர்ந்தது, மலர்ந்தன, சொரிந்தது, ஒளிவீசியது, வீசியது)**

**இருபொருள்பட எழுதுங்கள்**

- மலை நடுவில் கால் வைத்தால் (மாலை) மணம் வீசும்.
- பனை நடுவில் கால் வைத்தால் _ _ _ _ _ _ _
- தளை நடுவில் வ வைத்தால் _ _ _ _ _ _ _
- களை நடுவில் கால் வைத்தால் _ _ _ _ _ _ _
- கல் நடுவில் கால் வைத்தால் _ _ _ _ _ _ _

**நூலகத்திற்குச் சென்று தமிழ்புலவர்களின் புத்தகங்களைத் தேர்ந்தெடுங்கள். அவர்களைப் பற்றிச் சிறு குறிப்பு எழுதுங்கள்.**

# 7

# உல்லாசப் பறவைகள்



வேடிக்கையும் விநோதங்களும் மனிதனின் மனத்திற்கு இதம் அளிக்கின்றன. வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும் என்பர். குழந்தைகள் தங்களுக்கு விருப்பமான செயல்களில் ஈடுபட்டு மனமகிழ வேண்டும். தனது சொந்த அனுபவங்களையும் படைப்பு களையும் பிறரிடம் பரிமாற்றம் செய்து கொள்ள வேண்டும் போன்ற கருத்துகள் குழந்தைகள் அடையும் பொருட்டு இவ்வலகு அமைகிறது.

**முதன்மைக் கற்றல் அடைவுகள்**

- சொந்தக் கருத்துகளைப் பொருத்தமான சூழல்களில் பல்வேறு மொழி வெளியீட்டு வடிவங்களில் வெளியிடுகிறார்கள்.
- பல்வேறு நூல்களை வாசித்துத் தாங்கள் பெற்ற அனுபவங்களைப் பரிமாற்றம் செய்கிறார்கள்.
- தாங்கள் கண்டு அனுபவித்த இடங்கள், காட்சிகள், மக்கள் வாழ்க்கை முறை இவற்றை உட்படுத்திப் பயணக்குறிப்பு, பயண அனுபவம் எழுதி வெளியிடுகிறார்கள்.
- தமது வாழ்வில் நடந்த முக்கிய நிகழ்வுகள், அனுபவங்கள் இவற்றை நாட்குறிப்பில் எழுதுகிறார்கள்.




# சர்க்கஸ்



யானை சிங்கம் கரடியெல்லாம்
எதிரே நிற்குது
யாரையுமே சீண்டி டாமல்
'ஜாலம்' புரியுது

'பபூன்' வந்து சிங்கம் வாயில்
தலையை விடுகிறார்
டபார் என்று மோட்டார் சைக்கிள்
கிணற்றில் பாயுது.



உயர உயரச் சென்று ஆடும்
விந்தை பார்க்கலாம்
கயிறு மேலே நடந்து போகும்
காட்சி காணலாம்.



உவகையுடன் குடும்பத்துடன்
ரசிக்கும் விந்தையாம்.
கவலை யின்றிப் பார்த்து மகிழும்
சர்க்கஸ் ஆட்டமாம்.



## செயல்பாடுகள்

- பாடலை இராகத்துடன் பாடி மகிழுங்கள்
- சர்க்கஸ் பார்த்த அனுபவத்தைக் கூறுங்கள்.
- பொருத்தமான சொல்லை இணையுங்கள்

| | |
|---|---|
| உவகை | ஆச்சரியம் |
| விந்தை | விருப்பம் |
| ஜாலம் → வித்தை | வருத்தம் |
| சீண்டி | வித்தை |
| கவலை | தொட்டு |

- தொடர் அமையுங்கள்.

**எ.கா. :**


- ஓடி ஓடி : கோமாளி ஓடி ஓடி வித்தை காட்டினான்
- கூடிக்கூடி : _ _ _ _ _ _ _ _ _ _ _ _
- தேடித்தேடி : _ _ _ _ _ _ _ _ _ _ _ _
- நாடி நாடி : _ _ _ _ _ _ _ _ _ _ _ _
- பாடிப் பாடி : _ _ _ _ _ _ _ _ _ _ _ _

- கட்டத்திற்குள் ஒளிந்திருக்கும் விலங்குகளின் பெயர்களை எழுதுங்கள். ஒவ்வொன்றைப் பற்றியும் உங்களுக்குத் தெரிந்தவற்றை எழுதுங்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| க | ஆ | டு | வ | ப | சி |
| கு | ர | ங் | கு | சு | ங் |
| தி | மா | டி | ந | ரி | க |
| ரை | ன் | யா | னை | பூ | ம் |
| க | ழு | தை | த் | று | சி |
| பு | லி | நா | ய் | நா | ஓ |

**எ.கா. :**

பசு :
- பசு வீட்டில் வளரும் விலங்கு.
- பசு பால் தருகிறது.
- பசு புல் தின்னும்.



# பல்லுக்கும் நாக்குக்கும் சண்டை


ஒரு தடவை பல், நாக்கை வம்புக்கு இழுத்தது.
அது நாக்கிடம், ஏ நாக்கே! நானே
உன்னைவிட உயர்ந்தவன் என்றது.

நாக்கு சொன்னது நான்தான் பல ருசிகளையும் அறிந்தவன். இனிப்புக்கும் கசப்புக்கும் உள்ள வேறுபாட்டை உணர்ந்து கொள்ள என்னால் மட்டுமே முடியும்.

உடனே பல் பதிலுக்கு, இட்லி, தோசை, முறுக்கு, அதிரசம் ஆகியவற்றை நான் மென்று தந்தால்தான் உன்னால் விழுங்கவே முடியும் என்று இறுமாப்புடன் வாதம் செய்தது.

நாக்கு, நான் உன்னைவிட நீளம் அதிகம் கொண்டவன் என்று பெருமையாகக் கூறியது.

உடனே பல்லுக்குக் கோபம் வந்து, நாக்கே! நான் உன்னைக் கடித்து இரண்டு துண்டாக்கி விடுவேன் என்றது. நாக்கு மனதிற்குள் இந்தப் பல்லுக்கு ஒரு பாடம்



கற்பிக்க வேண்டும் என்று ஒரு திட்டம் போட்டது. சாலையில் ஒருவர் சென்று கொண்டு இருந்தார். அவர் நல்ல வாட்டசாட்டமானவர். அவரை நாக்கு, டேய்,.... எனச் சத்தமாக அழைத்தது.

அவர் திரும்பிப் பார்த்தார். மறுபடியும் நாக்கு, உன்னைத் தான்டா என்றது. அவர் கோபமடைந்தார். ஓங்கி வாய்மேல் ஒரு குத்துவிட்டார். ஒரு பல் உதிர்ந்தது.
மீண்டும் விடாமல் நாக்கு அவரைத் திட்டியது. இன்னொரு குத்து விட்டார். உடனே பல் அழுதபடி நாக்கின் காலைப் பிடித்துக் கெஞ்சியது. நாக்கு, நண்பரே, நீங்கள்தான் உயர்ந்தவர். ஒத்துக்கொள்கிறேன். மரியாதையாகப் பேசி அவரைத் திருப்பி அனுப்பிவிடுங்கள். இனி, நான் வம்புக்கு வரமாட்டேன். நாம் இருவருமே சமமானவர்கள்தான். நீ இல்லாவிடில், என்னால் சரியாகப் பேசமுடியாது. நான் இல்லாமல் உன்னால் சுவையறிய முடியாது. எனவே, நமக்குள் சண்டை வேண்டாம் என்று நாக்கு சமாதானம் கூறியது. இரண்டும் நண்பர்களாக மாறிவிட்டன.




## செயல்பாடுகள்

**கதையை உரையாடல் வடிவில் மாற்றி எழுதுங்கள்.**

பல் : ஏ! நாக்கே! உன்னைவிட நான்தான் உயர்ந்தவன்.

நாக்கு : நான் தான் உயர்ந்தவன். என்னால்தான் பல ருசிகளையும் அறிய முடியும்.



பல் : ______________________________

நாக்கு : ______________________________

பல் : ______________________________

நாக்கு : ______________________________

பல் : ______________________________

நாக்கு : ______________________________

பல் : ______________________________

நாக்கு : நமக்குள் சண்டை வேண்டாம். நாம் இருவரும் சமமானவர்களே. நாம் இருவரும் நல்ல நண்பர்கள்.

**படங்கள் கூறும் கருத்துகளை எழுதுங்கள்.**



- ______________________________
- ______________________________
- ______________________________

# மந்திர வித்தை

பாக்கின் அருகில் வெற்றிலையை வரவழைத்தல்

இதற்கு முதலில் மேஜையின் மீது கறுப்புத் துணி போட வேண்டும் என்பதை மட்டும் மறந்துடாதீங்க. நிகழ்ச்சி ஆரம்பிக்கும் முன்பே வெற்றிலையின் பின்பு சிறிதளவு மெழுகினைத் தடவ வேண்டும். ஒரு நீளமான தலைமுடியின் முனையை வைத்து ஒட்டி விட வேண்டும்.

நிகழ்ச்சி ஆரம்பித்தவுடன் வெற்றிலையை எடுத்து மேஜையின் மேல் உள்ள கறுப்பு துணி மீது வையுங்கள். பின்பு பார்வையாளரிடம் பாக்கைக் காட்டி விட்டு வையுங்கள். இப்போது இந்தப் பாக்கைத் தேடி வெற்றிலை வரப்போகுது என்று கூறுங்கள்.

மந்திரக் கோலினால் இரண்டு சுற்றுச்சுற்றிவிட்டு நுணுக்கமாக வெற்றிலையில் ஒட்டப்பட்டுள்ள முடியை ஜாக்கிரதையாக இழுக்க வேண்டும்.

இப்போது பாக்கை நோக்கி வெற்றிலை வருவது போலிருக்கும். கூட்டத்தினர் மகிழ்ச்சியில் கைதட்டுவர்.

கறுப்புத் துணியின் மீது இந்த நிகழ்ச்சியைச் செய்வதால் நீங்கள் முடியை இழுப்பது யாருக்கும் தெரியாது.




JT 475-3/Tamil-4 (Vol-II)

## செயல்பாடுகள்

- **மந்திர வித்தையை வகுப்பில் நடத்துங்கள்.**

- **குறுக்கெழுத்துப் புதிர்.**

**இடமிருந்து வலம் →**




1. பாம்புக்கு இன்னொரு பெயர் (4)
5. தைக்கு முந்தைய மாதம் (4)
6. வாரத்தின் இறுதிநாள் (2)
7. மங்கல விழாக்களில் இது பயன்படுத்தப்படும் (4)
9. பூனையைக் கண்டால் பாய்ந்தோடும் (2)
10. கரையானின் வீடு (3)
13. அடித்தால் வலிக்கும், கடித்தால் இனிக்கும் (4)
15. இதற்கு ஆதவன் என்ற பெயரும் உண்டு (4)
16. இவருக்குக் கைவிலங்கு அணிவர்(2)

**மேலிருந்து கீழாக ↓**

1. நிழல் தரும் மரம் (6)
2. வடையில் உண்டு; கடையில் இல்லை மலையில் உண்டு; மழையில் இல்லை (2)
3. நிலத்தை உழுவதற்கு இது உதவும் (2)
4. வீட்டில் வளர்க்கும் ஒரு பறவை (2)
5. பூக்களைக் கோர்த்தால் கிடைப்பது (2)
8. கருப்பு ...............க்காரன் காவலுக்குக் கெட்டிக்காரன் (3)
9. சுறு சுறுப்புக்குப் பெயர் பெற்றவள் (4)
11. யானையின் தோழன் (3)
12. ஊளையிடும் தந்திர விலங்கு (2)
14. ................... பிடிப்பது உடல் நலத்திற்குக் கேடு (2)



# சிரிப்பின் காரணம்

பல ஆண்டுகளுக்கு முன் ஒரு மன்னன், இதுவரை தான் பார்த்திராத பழங்களைக் கொண்டு வந்து காட்டுபவருக்குப் பரிசுகள் அளிக்கப்படும் என அறிவித்தான்.


மன்னனின் அவா என்ன என்பதை மக்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. தங்களுக்குக் கிடைத்த பழங்களை எடுத்துக்கொண்டு குறிப்பிட்ட நாளில் அரண் மனைக்குச் சென்று வரிசையில் நின்றனர்.

முதலில் சென்றவன் எலுமிச்சம்பழத்தைக் காட்டி, மன்னா! இது எலுமிச்சம்பழம் இதற்கு முன் பார்த்திருக்க மாட்டீர்கள் என்றான் பெருமையுடன்.


மன்னன், ‘இதைப் பார்த்திருக்கிறேன், ருசித்தும் இருக்கிறேன். அதனால் இந்தப் பழத்தை நீயே வாயில் போட்டு விழுங்கு’ என்றான். அந்த மனிதனுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. கஷ்டப்பட்டு விழுங்கினான்.

அடுத்து ஒருவன் மாம்பழத்துடன் வந்தான். மன்னன் இதுவும் நான் அறிந்ததே. அப்படியே விழுங்கு என்றான். வந்தவனோ விழுங்க முடியாமல் திணறிப்போய் கண்ணீர் விட்டான்.





மூன்றாமன் அன்னாசிப்பழத்துடன் வந்தான். "இதுவும் நான் பார்த்ததே! நீயே விழுங்கு" என்றான். அவனால் முடியவில்லை. அருகிலிருந்தவர் அவன் வாயில் பழத்தைத் திணித்தனர். உதடுகள் கீறப்பட்டு ரத்தம் வழிந்து கொண்டிருந்தது. ஆனால் அவன் அழவில்லை. சிரித்தான்.



மன்னனுக்கு ஆச்சரியமாக இருந்தது. "உனக்கு வலிக்கவில்லையா? சிரித்துக் கொண்டிருக்கிறாயே?" என்றான்.

அவன் "மன்னா, எனக்குப் பின்னால் ஒருவன் பலாப்பழத்துடன் வரப்போகிறான். அவனை நினைத்தேன். சிரிப்பு வந்தது" என்று கூறிவிட்டு மீண்டும் சிரித்தான்.

- ரிஷபானந்தர்

## செயல்பாடுகள்

- **கதையை வாசித்துச் சிரித்து மகிழுங்கள்.**
- **அன்னாசிப்பழத்தைக் கொண்டுவந்தவன் ஏன் சிரித்தான்?**
- **பலாப்பழத்தை அரசர் ஏற்றுக்கொண்டிருப்பாரா? கலந்துரையாடிக் கருத்தை வெளியிடுங்கள்**
- **கதையைத் தொடர்ந்து எழுதுங்கள்**

பலாப்பழத்துடன் ஒருவன் வந்தான். அவனது முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது. எனக்குத் தான் பரிசு கிடைக்கும். அவன் நம்பினான் ___________

______________________________

______________________________

______________________________

______________________________

- **தொடர் அமையுங்கள்**

**(எ.கா) :**

- பலாப்பழத்துடன் ஒருவன் வந்தான்.
  பலாப்பழத்துடன் ஒருவன் வருகிறான்.
  பலாப்பழத்துடன் ஒருவன் வருவான்.
- மன்னன் பரிசுகள் வழங்கினான்.
  _______________
  _______________
- எலுமிச்சம் பழத்தை விழுங்கினான்.
  _______________
  _______________
- காவலர்கள் அவனது வாயில் பழத்தைத் திணித்தனர்.
  _______________
  _______________



# பச்சைப் புல்மேடுகள்

மலைப் பயணம் என்றாலே மலைக்க வைக்கும் பயணமாகத்தானே இருக்கும். சுற்றுலாப் பேருந்து கோட்டயத்திலிருந்து புறப்பட்டது. எங்கள் முகங்களில் மகிழ்ச்சியின் மத்தாப்பு விரிந்தது. பேருந்துக்குள் ஒரே கும்மாளம். தாண்டிய தூரமே தெரியவில்லை. பாலாவையும் ஈராற்றுப்பேட்டையையும் தாண்டி, ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டு பேருந்து மலையேறத் தொடங்கியது. காங்கிரீட் கட்டடங்கள் வழி மாறின. பச்சை மரங்கள் தலையாட்டி வரவேற்றன. மெல்ல மெல்லக் குளிர்க் காற்று பேருந்துக்குள் புகுந்தது. வளைந்து வளைந்து பேருந்து மலைமேல் ஏறியது. நாங்கள் வந்த பாதையைத் திரும்பிப் பார்த்தோம். நெடுஞ்சாலை ஒருமலைப் பாம்பு போல் காட்சியளித்தது. “எல்லோரும் ஒரே பக்கமாக வந்து விடாதீர்கள். இரண்டு பக்கமாகவே இருங்கள்” என்று எச்சரித்தார் ஆசிரியர்.

வெண்பனி மேகங்கள் பேருந்தைச் சூழ்ந்தன. கையெட்டும் தூரத்தில் வானத்து மேகங்கள்! எங்களுக்கு அதிசயமாக இருந்தது. ஓட்டுநர் மஞ்சள் விளக்கை எரியவிட்டார். காது அடைப்பது போலவும் திறப்பது போலவும் இருந்தது. குளிர் அதிகரித்தது. எங்கள் பற்கள் மிருதங்கம் அடித்தன. மலைகளுக்கும் குளிரத்





தொடங்கிவிட்டதோ?அதனால்தான் பச்சைக் கம்பளியைப் போர்த்தியுள்ளதோ? மலைச் சரிவில் அடர்த்தியாக வளர்ந்து நின்ற தேயிலைத் தோட்டங்கள் அப்படித்தான் காட்சியளித்தன. கால்களில் சாக்கைச் சுற்றிக்கொண்டு. தலையில் ஒரு பிளாஸ்டிக் பையை அணிந்துகொண்டு. முதுகில் கூடையைச் சுமந்துகொண்டு இரண்டு கைகளாலும் தேயிலைக் கொழுந்தைக் கிள்ளிக்கொண்டு நடந்தனர் பெண்கள். சுற்றும் வானளாவிய மரங்கள்; அடர்த்தியான காடுகள். இடையிடையே வண்ண வண்ண மலர்கள். எங்குப் பார்த்தாலும் கண்கொள்ளாக் காட்சிகள். எங்களில் சிலர் அந்தக் காட்சிகளைத் தங்கள் கேமிராக்களில் படமெடுத்துக் கொண்டனர்.

சுமார் 65 கிலோ மீட்டர் தாண்டியிருக்கலாம். ஆஹா! தூரத்திலிருந்து ஒரு பசுமை சொர்க்கம் எங்களை நோக்கி வந்துகொண்டிருந்தது. ‘வாகமண்ணை நெருங்கி விட்டோம்’ என்றார் ஆசிரியர். வாகமண் ! சமீப காலத்தில் அதிகமாகப் பேசப்படும் முக்கியமான ஒரு சுற்றுலா மையம். பேருந்து நின்றது. ஒருவரை ஒருவர் முந்திக்கொண்டு நாங்கள் இறங்கினோம். இதமான குளிர்க்காற்று எங்களை நடுங்க வைத்தது. இப்போது நாங்கள் வாகமண்ணின் மார்பில். புகைப்படங்களிலும் தொலைக்காட்சியிலும் பார்த்து மகிழ்ந்த வாகமண் எங்கள் காலடியில்! இயற்கைக்கு இப்படி ஓர் அழகா! “குழந்தைகளே, இப்போது நாம் கடல் மட்டத்திலிருந்து 1100 மீட்டர்





உயரத்தில் நிற்கின்றோம்” என்றார் ஆசிரியர். எங்கள் கண் இமைகள் உயர்ந்தன. நாங்கள் சுற்றுமுற்றும் பார்த்தோம். பாதுகாப்புக் கோட்டை போல் மலைகள் சூழ்ந்திருந்தன. “தங்கள்பாறை, முருகன்மலை, சிலுவைமலை என்னும் மூன்று மலைகளால் வாகமண் சூழப்பட்டுள்ளது. இம்மூன்று மலைகளுமே மூன்று மதத்தினரின் புனிதத் தலங்கள்” என்றார் ஆசிரியர். அப்போது வாகமண் ஒருமைப்பாட்டின் ஓர் உன்னதச் சிகரமாக எங்களுக்குக் காட்சியளித்தது.

எங்கும் உயர்ந்ததும் தாழ்ந்தனவுமான மொட்டைக் குன்றுகள். குன்றுகளின் மேல் புல்மேடுகள் பச்சை போர்த்திக் கிடந்தன. ஓடும் மேகங்கள் தளர்ச்சியுற்று இளைப்பாறு வது போல் ஆங்காங்கே புல்மேடுகளில் படுத்துக் கிடந்தன. அருமையான காட்சி. உயர்ந்தோங்கி நின்ற பைன் மரக்காடுகள் எங்கள் உள்ளங்களைத் தூண்டில் போட்டு இழுத்தன. “இம்மரங்களை இருபது வருடத்திற்கு ஒரு முறைதான் வெட்டுவார்கள். இவற்றிலிருந்துதான் ரூபாய்நோட்டுக் காகிதம் தயாரிக்கப்படுகிறது” என்றார் ஆசிரியர். மரங்களுக்கு இடைவழியே சூரிய ஒளி! அற்புதமான காட்சி. அது சூரியன் தன் கதிர்க் கைகளால் எதையோ தேடுவதுபோல் இருந்தது. கண்ணார இயற்கைக் காட்சிகளைக் கண்டு களித்தோம். பின்னர், கொண்டு வந்த உணவை வயிறார உண்டு மகிழ்ந்தோம்.





காடுகளின் இடையே ஆங்காங்கே சில அடுக்குமாடிக் கட்டடங்கள். அவை யாருக்கும் தெரியாமல் மெல்லத் தலைதூக்கி எங்களை எட்டிப் பார்ப்பதுபோல் இருந்தன. வாகமண்ணின் அழகு மேனியில் எழுந்த கொப்புளங்களாகவே அவை எங்களுக்குக் காட்சியளித்தன.  இவை அதிகரித்தால் இந்த இனிய மகளின் அழகு கெட்டுவிடுமே என்று  நாங்கள் பயந்தோம். ஆனாலும் உள்ளுக்குள் ஒரு நன்னம்பிக்கை. மலைப்பாதைகளில் நடந்தோம். காணக் கண் கோடி வேண்டும் என்று சொல்வார்களே எவ்வளவு! உண்மை! மீண்டும் வாகமண்ணின் அழகுக் காட்சிகளை எல்லாம் எங்கள் உள்ளக் கேமராக்களில் பதிவு செய்துகொண்டோம். கண் நிறைய காட்சிகளையும் மனம் நிறைய மகிழ்ச்சியையும் சுமந்து கொண்டு நாங்கள் ஊர் திரும்பினோம். திரும்பும்போது நாங்கள் எங்களுக்குள் சொல்லிக் கொண்டோம். உண்மையாகவே இது தெய்வத்தின் சொந்த நாடுதான்.





## செயல்பாடுகள்

■ தொடர் எழுதுங்கள்.

எ.கா. :

- மெல்ல மெல்ல

  மலைப்பகுதியில் வாகனங்கள் மெல்ல மெல்ல ஏறிச் சென்றன.

- வளைந்து வளைந்து

  ______________________________

- தவழ்ந்து தவழ்ந்து

  ______________________________

- வண்ண வண்ண

  ______________________________

- வளர்ந்து வளர்ந்து

  ______________________________

- நெளிந்து நெளிந்து


  ______________________________

■ வர்ணனைச் சொற்களைப் பயன்படுத்தி நிகழ்ச்சி எழுதுங்கள்


- மலையில் ஏறிச் செல்லச்செல்ல வெண்பனி மூட்டங்கள் உடலைத் தழுவிச் சென்றன.
- ______________________________
- ______________________________
- ______________________________
- ______________________________

வெண்பனி மூட்டம்
பச்சைப் போர்வை
வெண் மேகங்கள்
கரும்பாறைகள்
பச்சைப்பசேல்

- வாகமண் சுற்றுலா மையம் சென்ற மாலதி தனது தோழி கவிதாவிற்குக் கடிதம் எழுதினாள். என்ன எழுதியிருப்பாள்? எழுதுங்கள்.



- சுற்றுலாச் சென்றுவிட்டு வந்த செய்தியை இலக்கியன் தனது நாட்குறிப்பில் எழுதினான். என்னென்ன எழுதியிருப்பான்?



## தொடர்கள் எழுதுங்கள்

**எ.கா. :**



- காற்று அடித்ததால் இலைகள் உதிர்ந்தன.

  காற்று அடித்தது. இலைகள் உதிர்ந்தன.

- மழை பெய்ததால் குளங்கள் நிரம்பின.

  __________ __________

- நாய் துரத்தியதால் திருடன் ஓடினான்.

  __________ __________

- சிங்கம் துரத்தியதால் மான்கள் ஓடின.


  __________ __________


- குகன் நன்றாகப் படித்ததால் தேர்வில் வெற்றி பெற்றான்.

  __________ __________

## சொல் கோபுரம் அமையுங்கள்

1. பசுவுக்கு இப்படியும் ஒரு பெயர் உண்டு.
2. கடலுக்கு மறு பெயர்.
3. யானையைக் குறிக்கும் சொல்.
4. மாதத்தைச் சுட்டும் வேறு சொல்.
5. சூரியனை இப்படியும் அழைப்பர்.
6. பச்சைப் பெட்டிக்குள் வெள்ளை முத்துக்கள்.
7. சிலம்பு, அரசன் இவை இரண்டும் சேர்ந்தால் கிடைக்கும் தொடர்.



# 8

# அமைதிப் பூங்கா



ஒருவருக்கொருவர் மனித நேயத்துடன் பழகும்போது தான் அமைதியான வாழ்வு உருவாகிறது. போர்கள், தீவிரவாதங்கள் அமைதியைக் குலைக்கின்றன. இதனால் அதிகம் பாதிக்கப்படுவர்கள் குழந்தைகளே. அமைதியான உலகைப் படைக்க எல்லோரும் முனைய வேண்டும். இன்னல்களில் சிக்குபவர்களைக் காப்பாற்றி உதவி செய்ய வேண்டும் இவை போன்ற கருத்துகளை குழந்தைகள் அடையும் வகையில் இவ்வலகு அமைகிறது.

## முதன்மைக் கற்றல் அடைவுகள்

- தாங்கள் கேட்டறிந்த தகவலின் அடிப்படையில் தன் வரலாறு, வாழ்க்கை வரலாறு எழுதி வெளியிடுகிறார்கள்.
- வாசித்துக் கேட்டு, கண்டறிந்து உட்கொண்ட நிகழ்வுகளைச் சுருக்கி வெளியிடுகிறார்கள்.
- வாசித்து இரசித்த படைப்புகளைப் போலச் செய்தல், மூக நடிப்பு, ஓரங்க நாடகங்கள் வாயிலாக வெளியிடுகிறார்கள்.
- பொருத்தமான சொற்களைப் பயன்படுத்திப் பொருள் பொதிந்த தொடர்கள் உருவாக்குகிறார்கள்.

# குண்டு


குண்டு குண்டு உயிர்களைக்
கொண்டு கொண்டு போகுதே
சண்டை போடத் தானடா
கண்டார் இந்தக் குண்டுகள்!

வானம் மீது கப்பலில்
வந்து குண்டு போடுவார்
ஈன மான புத்தியோ
இரக்க மென்ப தில்லையோ!

குழந்தை குட்டி யாவரும்
குலைந டுங்க ஓடியே
விழுந்து கெட்டு உயிர்களை
விடவோ இந்தக் குண்டுகள்!

கையும் காலும் போகவே
கஷ்ட முற்றோர் எத்தனை
ஐயோ பாவம் யாரிடம்
அவர்கள் அண்டி வாழ்வதோ!





ஊர்கள் பாழாய்ப் போகவே
உயிர்கள் யாவும் அழியவே
மார்பு தட்டிப் பேசுவார்
மனித ரல்லர் பேயடா!

ஒன்றும் அறியா மனிதரின்
உடல்கள் சாம்பல் ஆவதைக்
கண்டு மகிழும் நெஞ்சமும்
கடின மான கல்லடா!

குண்டு தன்னை யூகமாய்க்
கண்டு தந்த மனிதரின்
மண்டை மூளை உலகையே
மாய்க்கத் தானோ கண்டது!

- அழ.வள்ளியப்பா



## செயல்பாடுகள்

- பாடலை மெட்டமைத்துப் பாடுங்கள்
- பாடலில் உங்களுக்கு விருப்பமான வரிகள் எவை? ஏன்?
- தொடர் அமையுங்கள்.

**எ.கா. :**

| | | |
|---|---|---|
| குழந்தை குட்டி | : | மயில்வாகனன் குழந்தை குட்டிகளுடன் சுற்றுலா சென்றான். |
| கையும் காலும் | : | ------------------------------------------------ |
| | | ------------------------------------------------ |
| வாயும் வயிறும் | : | ------------------------------------------------ |
| | | ------------------------------------------------ |
| நகமும் சதையும் | : | ------------------------------------------------ |
| | | ------------------------------------------------ |
| தாயும் சேயும் | : | ------------------------------------------------ |
| | | ------------------------------------------------ |

- முதலெழுத்தை மாற்றுங்கள். கிடைக்கும் சொல்லால் தொடர் எழுதுங்கள்.

**எ.கா. :**

| | | |
|---|---|---|
| பொங்கல் | செங்கல் | சுட்ட செங்கல் வீடு கட்ட உகந்தது |
| ஊனம் | _ _ _ | _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ |
| குண்டு | _ _ _ | _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ |
| வானம் | _ _ _ | _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ |
| சாம்பல் | _ _ _ | _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ |

கோடிட்ட இடத்தைப் படத்தைப் பார்த்துப் பொருத்தமான சொற்களால் நிரப்புங்கள்


இல்லாமல் _ _ _ _ _ _ முடியாது


இல்லாமல் _ _ _ _ _ _ கிடைக்காது


இல்லாமல் _ _ _ _ _ _ கிடைக்காது


இல்லாமல் _ _ _ _ _ _ முடியாது


இல்லாமல் _ _ _ _ _ _ ஓடாது

கீழே உள்ள வாகனங்கள் தங்களைப் பற்றி என்னென்ன சொல்லும்? எழுதுங்கள்.



- என் பெயர் கப்பல்.
- _ _ _ _ _ _ _ _ _ _
- _ _ _ _ _ _ _ _ _ _
- _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _
- _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _



- என் பெயர் ஆம்புலன்ஸ்.
- _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

# நயம்பட உரை

மன்னர் சேதுராமனின் அவையில் நந்தா என்ற புலவர் இருந்தார். புலவர் நந்தா பேச்சு சாதுர்யம் மிக்கவர். அரசவையில் அடிக்கடி நகைச்சுவையாய்ப் பேசி எல்லோரையும் சிரிப்பலையில் ஆழ்த்துவார்.

அதனால் புலவர் நந்தாவை எல்லோரும் விரும்பினார்கள். அதோடு அவர் பேச்சைக் கேட்க ஆவலாகவும் இருந்தார்கள்.

ஒரு சமயம் பரங்கிநாட்டு மன்னர் பாலதேவன், மன்னர் சேதுராமனோடு போர் தொடுப்பதென முடிவு செய்தார்.

இதனைத் தமது ஒற்றர்கள் மூலம் அறிந்த மன்னர் சேதுராமன் திடுக்கிட்டார். தன் படைபலம் மிகச் சிறியது. பலதேவனின் படையோ மிகப் பெரியதாயிற்றே! அவர் படைகளை நாம் எப்படிச் சமாளிப்பது என்று கவலையோடு இருந்தார்.

மன்னரின் கவலையைப் புலவர் நந்தா உணர்ந்தார்.

அரசே! தாங்கள் உத்தரவு கொடுத்தால் நான் சென்று மன்னர் பலதேவனைச் சமாதானப்படுத்தி விடுவேன். அவரது கோபத்தைத் தணியச் செய்து சமாதானம் அடையும்படி செய்து விடுவேன் என்றார் புலவர்.

'புலவரே தங்களால் அது முடியுமா?' என்று வியப்போடு கேட்டார் மன்னர்.





“ம்… முடியும் மன்னா, எனது பேச்சுச் சாதுர்யத்தின் மீது எனக்கு நம்பிக்கை இருக்கிறது” என்றார் புலவர்.

“அப்படியானால் இன்றே பலதேவனைச் சந்திக்க ஏற்பாடு செய்கிறேன். நீங்கள் வெற்றியுடன் திரும்பி வாருங்கள்” என்றார் மன்னர்.

புலவரும் உடனே பரங்கி நாட்டிற்குச் சென்றார். அவையில் மன்னர் பலதேவனைச் சந்தித்து வணக்கம் தெரிவித்தார்.

“அரசே! தங்கள் நாட்டிற்கு நான் எதற்காக வந்தேன் என்பதை முதலில் தெரியப்படுத்த ஆவலாக உள்ளேன். பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் உள்ள ஓலைச்சுவடி ஒன்று எனக்குக் கிடைத்து. அந்த ஓலைச்சுவடியினை நான் ஆராய்ச்சி செய்தபோது அதில் சொர்க்கபூமி என்று ஓர் இடம் குறிப்பிடப்பட்டிருந்தது. அது வேறு எந்த இடமும் இல்லை. தங்களின் நாடுதான். ஆராய்ச்சியில் நான் அறிந்தது போலவே, தங்களின் ஒப்பற்ற கொடைத் தன்மையையும் தங்களின் சிறந்த ஆட்சி முறையினையும், மற்றும் உங்களின் அருமை, பெருமைகளையும் என் மன்னர் சேதுராமன் என்னிடம் அடிக்கடி கூறிக் கொண்டேயிருப்பார். தங்களை நேரில் வந்து பார்த்தபோது அவர் கூறியதை விடவும் நீங்கள் பல மடங்கு ஒப்பற்றவர் என்பதை அறிந்தேன்.

தங்கள் நாடான சொர்க்க பூமியின் பெருமையையும், தங்களின் பெருமையையும் உலகம் முழுவதும் அறியச் செய்ய வேண்டிக் கவிதை புனைந்து அதனை நூலாக வெளியிடப் போகிறேன். அந்த நூலை எழுதத் தங்கள் நாட்டையே தேர்வு செய்துள்ளேன். நான் நூல் எழுத அமைதியான இடம் ஒன்று வேண்டும். நூல் எழுதி முடிக்க ஆறு மாத காலங்கள் ஆகும். அதற்குத் தங்கள் அனுமதி பெறவே வந்துள்ளேன்" என்றார்.

இதனைக் கேட்ட மன்னரும், மற்றவர்களும் தங்கள் இருக்கையை விட்டே எழுந்து விட்டார்கள்.

"புலவரே! என்ன சொல்கிறீர்கள்! ஆச்சரியமாக இருக்கிறதே! என் நாடு சொர்க்க பூமியா...? என் நாட்டின் பெருமையையும் என் பெருமையையும் கொண்டு நீர் நூல் எழுத நான் எல்லா ஏற்பாடுகளையும் செய்து தருகிறேன். ஆறு மாத காலம் என்ன எவ்வளவு கால அவகாசம் வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம். உம் மன்னர் சேதுராமனே இந்த நூலை வெளியிடட்டும். அதற்கான பொறுப்புகளை எல்லாம் நான் ஏற்றுக்கொள்கிறேன். இந்த நல்ல செய்தியை இப்போதே உம் மன்னருக்கும் தெரியப்படுத்துகிறேன். ஒரு வருட காலம் உமக்குத் தேவைப்படும் உதவிகளைச் செய்ய பணியாட்களை நியமிக்கிறேன். நீர் எமது அரண்மனைத் தோட்டத்தில் இருந்தே நூல் எழுதலாம்" என்று கூறினார்.

தான் கூறியபடியே பலதேவனின் போரிடும் எண்ணத்தையே புலவர் மாற்றிவிட்டார்.





## செயல்பாடுகள்

### சரியான சொல்லை எடுத்து எழுதுங்கள்.

எ.கா. :

- ஆடை நெய்ய நூல் வேண்டும்
  அறிவைப் பெருக்க பல நூல் கற்க வேண்டும்.
- வானம் விளங்க ______ வேண்டும்
  விதியை வெல்ல ______ வேண்டும்
- நாட்டை காக்க ______ யுடன் செல்
  புகழுடன் வாழ பல ______ ப்புகள் செய்
- கரை புரண்டு ஓடுது ______
  கடிந்த மனமே ______

போர்
படை
ஆறு
மதி
கல்
அரம்
கரை

### இணையான சொல்லைப் பாடப்புத்தகத்திலிருந்து கண்டறிந்து எழுதுங்கள்.

- உன் கடிதத்தைப் படிக்க விருப்பமாக உள்ளேன்.
- யுத்தம் வேண்டாம் எனப் பிரதமர் கூறியுள்ளார்.
- நண்பர்கள் இருவரும் வருத்தம் அடைந்தனர்.
- அரசன் தளைபதியிடம் கட்டளை பிறப்பித்தான்.
- புலவர் தனது படைப்புகளைப் புத்தகமாக வெளியிட்டார்.

### தொடர்களிலுள்ள பிழைகளை நீக்கி எழுதுங்கள்

- நீதிபதி நிதி வலங்கினர்
- மக்கல் பொரட்டம் நடத்திணர்
- குறுவிகள் நெல்லைக் கெறித்தன
- அம்ம உனவு சமைத்தர்
- பறவைகள் பரந்தன
- சிருவர்கள் பல்லிக்குச் சென்ரணர்.




# செஞ்சிலுவைக்கு ஒரு வணக்கம்

பிரான்ஸ் மற்றும் ஆஸ்திரியாவுக்கு இடையில் 1859ஆம் ஆண்டு இத்தாலியில் கடுமையாக யுத்தம் நிகழ்ந்து கொண்டிருந்தது. அப்போது சுவிட்சர்லாந்தைச் சார்ந்த இளம் வணிகரான ஜீன் ஹென்றி டுனன்ட், போர்க்களத்தில் இரு தரப்பு வீரர்களும் காயங்களால் படும் வேதனையைப் பார்த்து, உள்ளூர் மக்களின் பங்களிப்புடன் உதவிகள் செய்தார்.

மேலும் நடுநிலைமையோடு போர் வீரர்களுக்கு உதவக்கூடிய ஓர் அமைப்பு ஏற்படுத்த வேண்டும் என்றும் ஹென்றி விரும்பினார். ஓராண்டுக்குப் பிறகு ஜெனிவா நகரில் ஹென்றியின் ஆலோசனைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக, சர்வதேசக் கூட்டம் நடந்தது. அதன் அடிப்படையில் 1864இல் உதயமானது தான் செஞ்சிலுவைச் சங்கம்.

உலகின் பல நாடுகளிலும் செஞ் சிலுவைச் சங்கங்கள் இயங்கு கின்றன. இஸ்லாமிய நாடுகளில் இது சிவப்பு பிறைநிலாச் சங்கம் என அழைக்கப்படுகிறது. முதலாம் உலகப் போர் நடந்த 1914ஆம் ஆண்டில் போரில் பாதிக்கப்பட்ட வீரர்களுக்கு உதவு வதற்கு இந்தியாவில் எந்த அமைப்பும் இல்லை.



1920இல் வைஸ்ராயின் நிர்வாகக் குழு உறுப்பினரான சர் கிளாட் ஹில் என்பவர். இந்தியச் செஞ்சிலுவைச் சங்கத்தை உருவாக்கச் சட்ட முன்வடிவை அறிமுகப் படுத்தினார்.

மக்களுக்குச் சேவை செய்த தன்னார்வத் தொண்டர்களின் சேவையை அங்கீகரிக்கும் விதமாக உலகச்செஞ்சிலுவை தினம் ஒவ்வொரு ஆண்டும் மே 8ஆம் தேதி அனுசரிக்கப்படுகிறது.

போர்க்காலங்கள், பூகம்பம், சுனாமி, பெருவெள்ளம் முதலான காலங்களில் இவர்கள் ஆற்றும் பணி மகத்தானது. வயதில் இளையவர்களை சமூகப் பணிகளில் ஈடுபடுத்தும் நோக்கத்தில் ஜூனியர் செஞ்சிலுவைச் சங்கம் செயல்படுகிறது. ஆரம்ப சுகாதாரம், எழுத்தறிவுப் பணி போன்றவற்றில் இவர்கள் ஈடுபடுகிறார்கள்.

நீங்களும் உங்கள் பள்ளியில் இத்தகைய அமைப்பு ஒன்றில் இணைந்து சேவை செய்யலாம்.



## செயல்பாடுகள்

**செஞ்சிலுவைச் சங்கத்தினரின் சேவைகளைப் பாடப்பகுதியிலிருந்து கண்டுபிடித்து எழுதுங்கள்**

- போரில் காயமடைந்தவர்க்கு உதவி செய்தல்.
- _____________________
- _____________________
- _____________________

**கீழே உள்ள தகவல் பலகையை நிறைவு செய்யுங்கள்**

செஞ்சிலுவைச் சங்கம் தொடங்கிய நாடு : ______________

செஞ்சிலுவைச் சங்கம் தொடங்கிய ஆண்டு : ______________

செஞ்சிலுவைச் சங்கம் தொடங்கியவர் : ______________

இந்தியாவில் செஞ்சிலுவைச் சங்கம் தொடங்கப்பட்ட ஆண்டு : ______________

செஞ்சிலுவைச் சங்க தினம் : ______________

**தொடர் எழுதுங்கள்**

**(எ.கா) :**

- நோய் நொடி : சுத்தமாக இருந்தால் நோய்நொடிகள் அண்டாது.
- பேரும் புகழும் : _____________________
- சீரும் சிறப்பும் : _____________________
- கையும் களவுமாக : _____________________
- வாடி வதங்கி : _____________________



# மலர்விழியின் மனசு

**காட்சி 1**

இடம் : வீடு

கதை மாந்தர்கள் : மலர்விழி, அவளது அப்பா, அம்மா

மலர்விழி தந்தையிடம் காசு கேட்கிறாள்

மலர்விழி : அப்பா எனக்குக் காசு தேவைப்படுகிறது. தருகிறீர்களா?

அப்பா : இன்று உனக்குப் பள்ளி விடுமுறைதானே! எதற்காகக் காசு கேட்கிறாய்?

மலர்விழி : ஏதாவது வாங்கிச் சாப்பிடலாமென்றுதான் கேட்கிறேன்.

அம்மா : அது சரி மலர்விழி, இதற்கு முன் வாங்கிய காசையெல்லாம் என்ன செய்தாய்?

அப்பா : அதானே தினமும் காசு கொடுத்தேனே. இந்த வயதில் உனக்கு அப்படி என்ன செலவு?

மலர்விழி : அன்றன்று தந்த காசையெல்லாம் அன்றன்றே வாங்கிச் சாப்பிட்டு விட்டேன்.

அப்பா : பொய் சொல்லாதே.

மலர்விழி : உண்மைதான் அப்பா. நானும் எனது தோழிகளும் சேர்ந்துதான் சாப்பிட்டோம்.

அப்பா : சரி, உன்னை நம்புகிறேன். இருப்பினும் கண்டதையும் வாங்கி சாப்பிடாதே. பின்னர் உடல் கெட்டுப்போகும்.

மலர்விழி : சரிங்கப்பா.

அப்பா : இனிமேல் உனக்குக் காசு கொடுக்கமாட்டேன்.

மலர்விழி : ஏன் அப்பா?

அப்பா : உனக்குத் தேவையான தின்பண்டங்களை நானே வாங்கி வருகிறேன்.

மலர்விழி : சரிங்கப்பா.



**காட்சி 2**

இடம்: உணவு விடுதி

கதை மாந்தர்கள் : மலர்விழி, அப்பா, பிச்சைக்காரன்

மலர்விழி பெற்றோருடன் உணவு விடுதியில் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறாள்.

அப்பா : மலர்விழி உன்னைப்பற்றி ஒரு தவறான செய்தி கேள்விப்பட்டேன், உண்மையா?

மலர்விழி : என்ன செய்தி அப்பா?

அப்பா : நான் உனக்குக் காசு கொடுப்பதை நிறுத்தியதும் நம் வீட்டுக்கு வரும் உறவினர், நண்பர்களிடம் எல்லாம் காசு கேட்டு வாங்குறியாமே?

மலர்விழி : இதில் என்ன தவறு இருக்கிறது?

அப்பா : வருவோர் போவோரிடம் எல்லாம் படிக்கும் நீ காசு கேட்டால் உன்னைப் பற்றி என்ன நினைப்பார்கள்? இல்லை எங்களைப் பற்றித்தான் என்ன நினைப்பார்கள்…? இனிமேல் இவ்வாறு செய்யக் கூடாது.

மலர்விழி : சரிங்கப்பா.

**(சாப்பிட்டு முடித்து மூவரும் வெளியில் வர, பிச்சைக்காரர்கள் நிற்கிறார்கள்)**

ஏழை : அய்யா சாமி தர்மம் பண்ணுங்கய்யா.

மலர்விழி : அப்பா பாவம் இவர்களுக்கு ஏதாவது காசு போடுங்களேன்.

அப்பா : மலர்விழி நான் நம் குடும்பம் நம் உறவினர்களைத் தவிர, வேறு யாருக்கும் உதவ மாட்டேன் என்பது உனக்குத் தெரியாதா?

மலர்விழி : உழைக்க இயலாதவர்களுக்கு உதவுவது நல்லதுதானே அப்பா.

அப்பா : எல்லாம் எனக்குத் தெரியும் நீ வா.

மலர்விழி : அப்பா தர்மம் தலை காக்கும் என்று எங்கள் பள்ளி ஆசிரியர் கூடச் சொல்லியிருக்கிறார்.

அப்பா : அப்படியானால் ஆசிரியரை தர்மம் செய்யச் சொல்.

**(மலர்விழி வேதனையடைகிறாள்)**



காட்சி 3

இடம் : மருத்துவமனை

கதை மாந்தர்கள் : பெரியவர் அற்புதம், மருத்துவர், மலர்விழியின் அப்பா

வாகனத்தில் அடிபட்ட மலர்விழியைத் தூக்கிக் கொண்டு மருத்துவமனைக்கு வருகிறார் பெரியவர் ஒருவர்.

பெரியவர்: மருத்துவரே என் பெயர் அற்புதம். அன்னை தெரசா கருணை இல்லத்தின் பொறுப்பாளாராக இருக்கிறேன்.

மருத்து : நான் என்ன செய்ய வேண்டும் சொல்லுங்கள்.

பெரியவர்: பள்ளி முடிந்து வரும் வழியில் இந்தச் சிறுமியின் மீது ஒருவன் வாகனத்தை மோதிவிட்டு நிற்காமலேயே போய்விட்டான். இவளுக்கு உடனடியாக சிகிச்சை செய்ய வேண்டும்.

**(மலர்விழிக்குச் சிகிச்சையளிக்கப்படுகிறது. பெற்றோருக்குத் தொலைபேசியில் தகவல் தெரிவிக்க, அவர்கள் மருத்துவமனைக்கு வந்து விபரம் தெரிந்து கொள்கிறார்கள்)**

அப்பா : அய்யா பெரியவரே என் மகளுக்கு உதவியதற்கு மிக்க நன்றி.

பெரியவர்: உங்கள் மகளை விட ஒன்றும் பெரிதாய் நான் அவளுக்கு உதவவில்லை.

அப்பா : என்ன சொல்கிறீர்கள்! எங்களுக்கு ஒன்றுமே புரியவில்லை.

பெரியவர்: ஒருநாள் உங்கள் மகள் மலர்விழி எங்கள் கருணை இல்லத்திற்கு வந்தாள்.



காட்சி 4

இடம் : கருணை இல்லம்

கதை மாந்தர்கள் : மலர்விழி, பெரியவர் அற்புதம்.

மலர்விழி கருணை இல்லத்தின் பெரியவரிடம் பணம் கொடுக்கிறாள்.

பெரியவர்: இது என்னம்மா?

மலர்விழி : அய்யா இது நான் சிறுகச்சிறுகச் சேர்த்த தொகையாகும்.

பெரியவர்: எதற்காக என்னிடம் தருகிறாய்?

மலர்விழி : அய்யா இந்த வழியே பள்ளிக்குப் போகும்போது இங்குள்ளவர்களைப் பார்ப்பேன். ஆதரவு இல்லாமல் இருக்கும் இவர்களுக்கு என்னால் முடிந்ததைச் செய்ய வேண்டுமென்று தீர்மானித்தேன்.

பெரியவர்: ஆஹா, எத்தனை நல்ல உள்ளம்!


மலர்விழி : என் பெற்றோர் தந்த பணம் தவிர, என் இல்லத்துக்கு வருபவர்களிடமும் காசு கேட்டு வாங்கிச் சேர்த்து வைத்தேன்.

பெரியவர்: இது உன் பெற்றோருக்குத் தெரியுமா?

மலர்விழி : தெரியாது. என் தந்தை யாருக்குமே உதவமாட்டார். அதனால் தான் உண்மையை மறைத்து எனக்கென்று கேட்டு வாங்கிச் சேர்த்து வைத்தேன்.

பெரியவர்: இத்தனை சிறிய வயதில் எத்தனை அரிய முயற்சி! கேட்டும் தராத எத்தனையோ வசதி படைத்தவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் நீ ஒரு பாடம்.

**(நடந்ததை முழுவதுமாகக் கேட்ட தந்தை வெட்கிப் போகிறார்)**



காட்சி 5

இடம் : மருத்துவமனை

கதை மாந்தர்கள் : பெரியவர் அற்புதம், மலர்விழி, மலர்விழியின் அப்பா

(நடந்ததைக் கேட்டு மலர்விழியின் அப்பா வருந்துகிறார்.)

அப்பா : பெரியவரே, என்னை மன்னியுங்கள். யாருக்குமே உதவாமல் இருந்த என்னை மலர்விழி திருத்திவிட்டாள். என்னைப் போலவே நீங்களும் நினைத்திருந்தால் என் மகளின் நிலைமை என்னவாகியிருக்கும்?


பெரியவர்: உதவும் நல் உள்ளம் மனிதர்களாகிய அனைவருக்குமே இருக்க வேண்டும். அப்போதுதான் வாழ்வில் எல்லாமே நல்ல விதமாக நடக்கும்.

அப்பா : இனி எல்லோருக்கும் உதவுவேன்.

மலர்விழி : ஆம் அப்பா! உதவுவதற்கு வயது வித்தியாசம் கிடையாது. எல்லாரும் உதவலாம்.

அப்பா : நீ சொல்வது முற்றிலும் சரியே!

**(மலர்விழியைப் பாராட்டிய தந்தை பெரியவருக்கு நன்றி கூறி, மலர்விழியுடன் வீட்டுக்குச் செல்கிறார்)**



## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசித்து ஏதேனும் ஒரு காட்சியை நடித்துக் காட்டுங்கள்.
- உங்களுக்குக் கிடைக்கும் பணத்தை என்ன செய்வீர்கள்? கலந்துரையாடிக் கருத்தைக் கூறுங்கள்.
- பிறருக்கு உதவிய ஒரு நிகழ்ச்சியைக் கூறுங்கள்.
- வாக்கியத்தை விரிவுபடுத்தி எழுதுங்கள்

**எ.கா. :**

- பார்ப்பேன்

  நான் குறி பார்ப்பேன்.

  நான் சரியாகக் குறிபார்ப்பேன்.
- கேட்பாள்

  _ _ _ _ _ _ _ _ _

  _ _ _ _ _ _ _ _ _

  _ _ _ _ _ _ _ _ _
- உள்ளம்

  _ _ _ _ _ _ _ _ _

  _ _ _ _ _ _ _ _ _

  _ _ _ _ _ _ _ _ _
- வருகிறார்

  _ _ _ _ _ _ _ _ _

  _ _ _ _ _ _ _ _ _

  _ _ _ _ _ _ _ _ _



- பாடப்பகுதியிலுள்ள வினாத்தொடர்களைக் கண்டறிந்து எழுதுங்கள்

**எ.கா. :**

- எதற்காகக் காசு கேட்கிறாய்?

  _ _ _ _ _ _ _ _ _ _ _

  _ _ _ _ _ _ _ _ _ _ _

  _ _ _ _ _ _ _ _ _ _ _

# 9

# ஒரு தாய் மக்கள்



சமூகத்தில் உயர்ந்தோர், தாழ்ந்தோர் யாருமில்லை. உயர்வும் தாழ்வும் மனிதரின் செயல்களில் தான் இருக்கிறது. மனிதருள் ஆண் பெண் என இரு சாதிகளே உள்ளன. ஆணும் பெண்ணும் ஒருவருக்கொருவர் சமமானவரே என்னும் கருத்தை குழந்தைகள் அடையும் விதம் இவ்வலகு அமைகிறது.

## முதன்மைக் கற்றல் அடைவுகள்

- மனித நேயத்தை உணர்த்தும் கவிதைகளை உணர்ச்சி பொங்க வாசித்து இரசனைக் குறிப்புகள் எழுதுகிறார்கள். பாடல் கருத்தைக் கூறுகிறார்கள்.
- பல்வேறு நூல்கள், நிகழ்வுகளை வாசித்துத் தான் பெற்ற அனுபவங்களைப் பரிமாற்றம் செய்கிறார்கள்.
- பேச்சுப் போட்டி நடத்துவதற்கான குறிப்புகள் தயாரித்து, முக்கிய நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு பேசுகிறார்கள்.
- பொருத்தமான சொற்கள், தொடர்கள் பயன்படுத்தி உகந்த மொழிநடையில் உரையாடல் எழுதுகிறார்கள்.





# இது மனித சாதி

மனிதன் என்று சொன்னால் போதும்
எடுத்துச் சொல்லடா
தனித்த சாதி ஒன்றும் இல்லை
தடுத்துச் சொல்லடா

இமயம் எங்கள் இதயம் என்று
இணைத்துச் சொல்லடா
எல்லோ ரையும் உடன்பி றப்பாய்
அணைத்துக் கொள்ளடா



மனித சாதி ஒன்றே என்று
கூறி முழங்குவோம்
மண்ணும் பொன்னும் பொதுவாய் ஆக்கி
வாரி வழங்குவோம்

புனித மான உயிரை எல்லாம்
போற்றி வணங்குவோம்
பூசல் வேண்டாம் அமைதி வேண்டும்
இன்றே இணங்குவோம்.

**உதயை மு. வீரையன்**





## செயல்பாடுகள்

- **உணர்ச்சி பொங்கப் பாடலைப் பாடுங்கள்**

- **பொருத்தமான ஓசையுடைய தொடர்களை எழுதுங்கள்**

**எ.கா. :**

| | |
|---|---|
| ✿ எடுத்துச் சொல்லடா | ✿ கூறி முழங்குவோம் |
| ✿ __________ | ✿ __________ |
| ✿ __________ | ✿ __________ |
| ✿ __________ | ✿ __________ |

- "எல்லோரையும் உடன் பிறப்பாய்
அணைத்துக் கொள்ளடா"
என்று கவிஞர் கூறுகிறார்.
நீங்கள் யாரையெல்லாம் உடன் பிறப்பாக எண்ணுகிறீர்கள்? ஏன்?


- **பாடலை வாசித்துக் கருத்தைக் கூறுங்கள்**

இந்திய நாட்டை எல்லோரும்
எடுத்துக்காட்டாய்ச் சொல்லிடணும்
இந்திய நாடு மேலோங்க
ஒவ்வொரு மனிதனும் உழைத்திடணும்

ஒற்றுமை பலத்தைக் காட்டிடணும்
உறவுக்குப் பெருமை சேர்த்திடணும்
தீண்டாமை நோயைப் போக்கிடணும்
தீமைக் குணங்களை நீக்கிடணும்

– குழ. கதிரேசன்

# ஏற்றத் தாழ்வற்ற சமுதாயம்




அன்பு மாணவர்களுக்கு,

இன வெறிக்காக மகாத்மா காந்தி அன்றே பாடுபட்டவர் என்பதை நீங்கள் அறியாத வர்களல்ல. தென்னாப்பிரிக்காவில் இருந்த போது கறுப்பர் என்று அவர் அவமானப் படுத்தப்பட்டார். எனவே இனவெறியின் கொடுமையை மகாத்மா நன்கு உணர்ந் திருந்தார்.

தென் ஆப்பிரிக்காவில் வக்கீல் தொழில் பார்த்துக் கொண்டிருந்தபோது ஒரு நாள் மகாத்மா காந்தி முடிவெட்டிக் கொள்ளுவதற்காகச் சலூனுக்குச் சென்றார். சலூன் சொந்தக்காரர் கறுப்பராகிய காந்திக்கு முடி வெட்ட மறுத்து விட்டார்.

இதனால் அவமானம் அடைந்த காந்திஜி வெள்ளையர்களின் நிறவெறி நீங்கும் வரை சலூனில் முடி வெட்டிக் கொள்ளுவதில்லை என்ற சபதம் எடுத்ததுடன் கடைக்குச் சென்று முடி வெட்டும் கத்திரிக்கோல் ஒன்றை வாங்கித் தானே கண்ணாடி முன் அமர்ந்து முடி வெட்டினார்.



அவரது தலையைப் பார்க்க அவருக்கே சகிக்கவில்லை. சீராக வெட்டப்படவில்லை. ஆனால் அதற்காக அவர் கவலை கொள்ளவில்லை.

அதே தலையுடன் மறுநாள் நீதி மன்றத்துக்குச் சென்றார். நீதி மன்றத்தில் அனைவரும் காந்தியின் தலையைப் பார்த்துச் சிரித்தனர்.

ஒரு வக்கீல், காந்தி என்ன நேற்று தலையை எலிவலைக்குள் வைத்துப் படுத்திருந்தாரோ என்று கிண்டலாகக் கேட்க, காந்தியோ பொறுமையாக ‘‘வெள்ளைக்காரர் சலூனில் கறுப்பரான எனக்கு முடிவெட்ட மறுத்ததால் நானே என் முடியை வெட்டிக் கொண்டேன். நிறவெறியால் ஏற்பட்ட அவமானத்தை விடத் தாறுமாறாக வெட்டப்பட்ட முடியால் ஏற்பட்ட அவமானம் பெரிதல்ல” என்றார்.



மனிதர்கள் அனைவரும் சமம், உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்றும் கறுப்பர், வெள்ளையர் என்றும் ஏழை பணக்காரன் என்றும் வேறுபாடு காட்டாது அனைவரும் சமமாகப் பாவிக்கப்படும் காலம் மலர இளைஞர்கள் ஆதரவு காட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காந்தியின் பிறந்த நாளைக் கொண்டாடும் வகையாக மனிதாபிமான சமுதாயம் மலர உறுதி செய்வோம்.

**- டாக்டர் எஸ்தர் பாண்டியன்**

## செயல்பாடுகள்

- பாடப்பகுதி நிகழ்ச்சியை வாசித்து உங்கள் கருத்தைக் கூறுங்கள்.

- காந்தியடிகள் வக்கீல் ஒருவருக்குக் கூறிய பதில் பாடப்பகுதியில் உள்ளது. எடுத்து எழுதுங்கள்.

- கலந்துரையாடிக் கருத்துகளைச் சிறு குறிப்பாக எழுதுங்கள்

பொருள் :

- ஏழை பணக்காரன்
- உயர்ந்தோர் தாழ்ந்தோர்

- **தொடரிலுள்ள இடப்பெயர்களைக் கண்டுபிடியுங்கள்.**

**எ.கா. :**

- காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் வக்கீல் தொழில் செய்தார். (தென்னாப்பிரிக்கா)
- காந்தியடிகள் முடிவெட்ட சலூனுக்குச் சென்றார். (     )
- காந்தியடிகள் கத்தரிக்கோல் வாங்கக் கடைக்குச் சென்றார். (     )
- காந்தியின் தலையைப் பார்த்து நீதிமன்றத்தில் அனைவரும் சிரித்தனர். (     )
- நெல்சன் மண்டேலா இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்தார். (     )
- திருச்சூர் சிற்பக்கலை நகரமாகும். (     )

- **நீங்கள் சொந்தமாகச் செய்யும் வேலைகளைப் பட்டியலிடுங்கள்.**
  - துணி துவைத்தல்
  - ___________________
  - ___________________
  - ___________________

## ஒரே பொருள் தரும் சொற்களை இணையுங்கள்

| | |
|---|---|
| வாசம் | நேரம் |
| சமயம் | வீடு |
| இல்லம் | வாழுதல் |
| குரல் | சினம் |
| கொஞ்சம் | ஆச்சரியம் |
| வியப்பு | சத்தம் |
| வேதனை | படைப்பு |
| கோபம் | சிறிதளவு |
| சிருஷ்டி | வருத்தம் |



## வண்ணச்சொல்லுக்குப் பொருத்தமான வேறு சொல்லை எழுதுங்கள். பொருள் மாறக்கூடாது.

**எ.கா. :**


- நான் கோவளத்துக்குப் போனேன்
  நான் கோவளத்துக்குச் சென்றேன்
- இளங்கோ சிலப்பதிகாரத்தை எழுதினார்
  ____________________
- அமுதா முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றாள்
  ____________________
- நேரு லண்டனில் கல்வி கற்றார்
  ____________________
- கோகிலா திறமை இல்லாதவள்
  ____________________
- எழிலன் குற்றம் செய்தான்
  ____________________

பயின்றார்
இயற்றினார்
அற்றவள்
புரிந்தான்
அடைந்தாள்

# பெண்ணுரிமை

ஆணோடு பெண்ணுமிங்குச் சமமாகும் என்னும்
அறவாழ்வு சமுதாயத்தில் நிலவல் வேண்டும்
பேணுகின்ற குடும்பத்தில் இன்பம் வேண்டும்
பெண்ணுரிமை உயிராகத் திகழ வேண்டும்
ஊனோடு உயிராக வாழ்வில் பெண்கள்
உரிமையுடன் என்றென்றும் விளங்கிடவே வேண்டும்
நா நாடும் நலமெல்லாம் பெண்ணின் உரிமை
நல்லறத்துள் விளங்கிடவே காண்போம் வாரீர்
உணவதனைச் சமைக்கின்ற எந்திரம் என்றே
உயிரான பெண்களைத்தான் எண்ணல் விட்டு
குணமான நல்வாழ்வில் பெண்கள் தாமும்
குலமகளாய் உரிமைகள் யாவும் பெற்று
மணமிக்க மலராக விளங்க வேண்டில்
மங்கையர் தம்முரிமை கொள்ளல் வேண்டும்.

- ம. பகவதியப்பன்.



## செயல்பாடுகள்

- கவிதையை உணர்ச்சியுடன் வாசியுங்கள்.

- வேண்டும் என சொல்லில் முடிவடையும் தொடர்கள் எழுதுங்கள்.

எ.கா. :

- நான் காலையில் கோயிலுக்குச் செல்ல வேண்டும்
- _______________________
- _______________________
- _______________________
- _______________________

- உங்களுக்கு ஒரு தம்பியோ, தங்கையோ இருந்தால் அவர்களிடம் எவ்வாறெல்லாம் நடந்துகொள்வீர்கள்? சொல்லுங்கள்.

- உங்கள் வீட்டில் அம்மாவுக்கு என்னென்ன உதவிகள் செய்வீர்கள்? கூறுங்கள்.

- தொடரிலுள்ள சொற்களைப் பிரித்து எழுதுங்கள்

எ.கா. :

- பெண்ணுரிமை - பெண் உரிமை
- நல்லறம் - _ _ _, _ _ _
- தம்முரிமை - _ _ _, _ _ _
- அறவாழ்வு - _ _ _, _ _ _
- குலமகள் - _ _ _, _ _ _
- நல்வாழ்வு - _ _ _, _ _ _

**குறிப்புகளைப் பயன்படுத்திப் புதிருக்கான விடை கண்டுபிடியுங்கள்.**

- இது ஒரு நகர்

  முதல் இரு எழுத்துகள் மரியாதையைக் குறிக்கும்.

  இறுதி இரு எழுத்துகள் பயிரைக் காக்கும்.

  நடுவில் உள்ள இரு எழுத்துகள் உணவாகும்.

  – நான் யார்? ____________

- இது ஒரு மலர்

  முதல் பகுதி ஆதவனின் மறுபெயர்.

  பிற்பகுதி தேசத்தந்தையைக் குறிக்கும்.

  – நான் யார்? ____________

**ஒரு சொல்லுக்கு இரு பொருள் எழுதுங்கள்.**

**எ.கா. :**

- மாலை : பொழுது சாய்ந்தால் மாலை
  : மலர்கள் இணைந்தால் மாலை
- ஆடு : ______________
  : ______________
- ஆறு : ______________
  : ______________
- திங்கள் : ______________
  : ______________
- நூல் : ______________
  : ______________

# உயர்வும் தாழ்வும்

பாரதியார் புதுச்சேரியில் வாசம் செய்துக் கொண்டிருந்த ஒரு சமயம்.... செல்வமும், செல்வாக்கும் மிகுந்த நண்பர் ஒருவர் மதிய உணவுக்குத் தம் இல்லத்துக்கு வருமாறு அழைத்திருந்தார்.

அந்த நண்பர் எந்த அளவுக்குச் செல்வச் செழிப்புடன் விளங்கினாரோ அந்த அளவுக்கு நிற வெறி கொண்டவர்.


செல்வந்த நண்பர் வீட்டுக்குப் பாரதியார் புறப்பட்டுச் சென்று கொண்டிருந்தபோது ஒரு சேரியைக் கடந்து செல்ல வேண்டியிருந்தது.

ஒரு குடிசை வாசலில் வயதான ஒரு மனிதன் ஒரு சிறு கடிதத்தைக் கையில் வைத்துக் கொண்டு, தெருவில் போவோர் வருவோரிடம் ஏதோ வேண்டுகோள் விடுத்துக் கொண்டிருந்தான். ஆனால், யாரும் அவன் பேச்சை வாங்கிக் கொண்டதாகவே தெரிய வில்லை.

பாரதியார் அந்தக் கிழவனைக் கடந்து சென்றபோது அந்த முதியவர் அவரை நோக்கி ஐயா என்று குரல் கொடுத்தார்.

என்ன ஐயா என்று பாரதியார் நின்று கேட்டார்.

ஐயா, வெளிநாடு ஒன்றில் வேலைக்காகச் சென்ற என் மகனிடமிருந்து கொஞ்ச



காலமாகக் கடிதமும் வரவில்லை, வழக்கமாக அவன் அனுப்பும் சிறிய தொகையும் வரவில்லை. அவனுக்கு ஒரு கடிதம் எழுதிப் பார்க்கலமா என நினைக்கிறேன். யாரும் எனக்காகக் கடிதம் எழுதித் தர மறுக்கிறார்கள். நீங்களாவது தயவு செய்து எனக்கு உதவு முடியுமா என்று கெஞ்சும் குரலில் வேண்டுகோள் விடுத்தார்.

ஒரு நண்பர் வீட்டுக்குச் சாப்பிடப் போகிறேன் திரும்பி வரும் போது எழுதித் தரட்டுமா எனப் பாரதியார் வினவினார்.

கடிதத்தை இப்பொழுதே எழுதினால்தான் இன்றைய தபாலில் சேர்க்க முடியும் அதுதான் யோசிக்கிறேன் என்றார் முதியவர்.

பாரதியார் அந்தக் குடிசையின் சிறு திண்ணையில் உட்கார்ந்தார். அந்த முதியவர் தயாராக வைத்திருந்த தாளை வாங்கிக்கொண்டு, சொல்லுங்கள் ஐயா, என்ன எழுத வேண்டும் என்று கேட்டார்.

முதியவர் மிகவும் நிதானமாக யோசித்துத் திக்கித்திணறி விஷயங்களைச் சொல்ல அதைப் பாரதியார் எழுதி முடிக்க ஏறத்தாழ ஒருமணி நேரம் ஆகிவிட்டது. அதற்குள் செல்வந்தர் பாரதியாரைக் காணாமல் தமது காரை எடுத்துக்கொண்டு வந்தார்.

பாரதியார் ஒரு குடிசை வாசலில் அமர்ந்து குடிசை வாழ் முதியவர் ஏதோ சொல்ல எழுதிக் கொண்டிருப்பதைக் கண்டு வியப்பும். வேதனையும், கோபமும் அடைந்தார். என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? நான் உங்களைச் சாப்பிட அழைத்ததை மறந்து விட்டீர்களா? என்று சற்று கோபம் கலந்த குரலில் கேட்டார்.

பாரதியார் புன்னகை புரிந்தவாறு உங்கள் வீட்டுச் சாப்பாட்டை மறந்து விடுவேனா? வரும் வழியில் இந்தப் பெரியவர் ஒரு கடிதம் எழுதித் தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். கடிதத்தை இன்றே அனுப்பியாக வேண்டும் என இவர் விரும்பியதால் இவர் வேலையை முடித்த பிறகு அங்கே சாப்பிட வரலாம் என்று நினைத்தேன் என்றார்.



என் வீட்டுச் சாப்பாட்டைவிட இந்த அற்ப மனிதனுக்குக் கடிதம் எழுதுவது பெரிதாகப் போய் விட்டதா? என்று சற்று கடுப்பான குரலில் செல்வந்தர் வினவினார்.

“இந்த விஷயத்தைப் பெரிதுபடுத்தாதீர்கள். உங்கள் வீட்டுச் சாப்பாட்டுக்கென்ன, இன்றில்லாவிட்டாலும் என்று வேண்டுமானாலும் எனக்குச் சாப்பிட வாய்ப்பு கிடைக்கும். இந்த அப்பாவி மனிதனுக்கோ இந்தக் கடிதம் உயிர் போன்றது. என் வேலை முடிந்து விட்டது நாம் புறப்படலாமா?” என்று கேட்டார் பாரதியார்.

செல்வந்தருக்குக் கோபம் அடங்கவில்லை. இந்தக் கிழவனையும் என்னையும் சமமமாக மதிப்பிட்டு நீங்கள் பேசுவதை என்னால் சகித்துக் கொள்ள முடியவில்லை. என் மீது உமக்கு உண்மையிலேயே மதிப்பும் மரியாதையும் இருந்திருந்தால் இந்தக் கேடு கெட்ட ஜென்மத்தின் வேண்டுகோளைப் புறக்கணித்து விட்டுக் காலத்தோடு என் வீட்டுக்குச் சாப்பிட வந்திருக்க வேண்டும் என்று சத்தம் போட்டார்.

பாரதியார் கலகலவெனச் சிரித்தார்.

என்னைப் பொறுத்தமட்டில் மனிதர்கள் எந்த நிலையில் இருந்தாலும், அவர்கள் செல்வந்தராகவோ பிச்சைக்காரனாகவோ இருந்தாலும் ஒரே மட்டத்தில் இருப்பவர்கள் என்றே கருதுகிறேன். தாங்களும் என்னைப் பற்றி அப்படித்தான் மதிப்பும் அன்பும் செலுத்துகிறீர்கள். இதே கண்ணோட்டத்துடன் இந்த மனிதனைத் தாங்கள் பார்க்கக் கூடாதா? என்றார் பாரதியார்.

செல்வந்தர்ஆத்திரத்தின் எல்லைக்கே சென்று விட்டார்.நீர் சொல்வதைப் பார்த்தால் ஒரு பன்றியும் நானும் கூடச் சமமானவர்கள் என்று கூறுவீர்கள் போலிருக்கிறதே! என்று கூச்சல் போட்டார்.

தத்துவரீதியாகப் பார்க்கும் போது தாங்கள் கூறுவதும் உண்மைதான். இறைவன் சிருஷ்டியில் எல்லா உயிரினங்களுமே ஒன்றுதான். உயிரினங்கள் அனைத்தும் ஒரே மதிப்புடைய வைதான்.

செல்வந்தர் தமது மன ஆவேசத்தை அடக்கமாட்டாதவராகப் பாரதியாரை ஒரு துரும்பு போலப் பார்த்து விட்டுக் காரில் ஏறிச் சென்று விட்டார்.



## செயல்பாடுகள்

- பாரதியார் முதியவருக்குக் கடிதம் எழுதிக் கொடுத்தார் அல்லவா! அதில் என்னென்ன எழுதியிருப்பார்?

- பாரதியாருக்கும் முதியவருக்கும் இடையே நடந்தவற்றை உரையாடலாக எழுதுங்கள்.

முதியவர் : அய்யா எங்கே சென்று கொண்டிருக்கிறீர்கள்

பாரதியார் : வணக்கம் ஐயா! இன்று ஒரு சமூக விழிப்புணர்வுக் கூட்டம் நடைபெற உள்ளது. அங்கே சென்று கொண்டிருக்கிறேன்.

முதியவர் : ______________________________

பாரதியார் : ______________________________

முதியவர் : ______________________________

பாரதியார் : ______________________________

- ‘சமூகத்தில் யார் பெரியோர், யார் சிறியோர்’ என்னும் தலைப்பில் பேச்சுப் போட்டி நடத்துவதற்கான குறிப்புகள் தயாரியுங்கள்.



## தொடரைப் பிரித்து வேறுபொருள் எழுதுங்கள்.

**எ.கா. :**

| | | | |
|---|---|---|---|
| வெங்காயத் தாமரை | - | வெங்காயம் | தாமரை |
| செங்கல்பட்டு | - | _ _ _ _ | _ _ _ _ |
| ஆடுதுறை | - | _ _ _ _ | _ _ _ _ |
| பலகை | - | _ _ _ _ | _ _ _ _ |
| கடிகாரம் | - | _ _ _ _ | _ _ _ _ |
| வைகை | - | _ _ _ _ | _ _ _ _ |

## பொருள் மாறுபடுமாறு வேறுதொடர் எழுதுங்கள்.

**எ.கா. :**

- நேரு மாமா வீட்டிற்குச் சென்றார்.

  நேரு மாமா, வீட்டிற்குச் சென்றார்.

  நேரு, மாமா வீட்டிற்குச் சென்றார்.

- இன்று முதல் தோசைக்குச் சர்க்கரை இல்லை.

  _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

  _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

- தமிழில் அறிவியல் குறித்து கட்டுரை எழுது.

  _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

  _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

- அது புதிய மாணவர் விடுதி

  _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

  _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

- அவள் அக்கா வீட்டிற்குப் போனாள்.

  _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

  _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

## இவரை அறிந்துகொள்ளுங்கள்

பெண்களின் முன்னேற்றத்திற்கு வழிகோலியவர் டாக்டர். முத்துலட்சுமி அம்மையார். பாரதி, அன்னிபெசன்ட் ஆகியோரிடம் நெருங்கிய நட்பு கொண்டவர். விடுதலைப் போராட்டச்சிந்தனைகளில் ஈடுபாடு உடையவர். அதுமட்டுமன்றி பெண் முன்னேற்றச் செயல்பாடுகளில் பங்குகொண்டவர். வாழ்வில் கைவிடப்பட்ட பெண்கள், ஆதரவற்று நின்ற அனாதைக் குழந்தைகள் ஆகியோரை அரவணைத்தவர். இவர்களின் நல்வாழ்விற்காக தனது வீட்டிலே 'ஔவை இல்லம்' தொடங்கினார். இவர், முதல் இந்தியப் பெண் மருத்துவராகவும், சட்டமேலவை உறுப்பினராகவும் திகழ்ந்தார்.

**சிறப்புத் தினங்களைச் சரியாகப் பொருத்துங்கள்.**

| | | |
|---|---|---|
| நூலக தினம் | - | நவம்பர் பதினொன்று |
| தாய்மொழி தினம் | - | ஜூன் பத்தொன்பது |
| வாசிப்பு தினம் | - | அக்டோபர் ஒன்று |
| ஆசிரியர் தினம் | - | ஜனவரி பதினொன்று |
| குழந்தைகள் தினம் | - | ஜனவரி இருபத்தாறு |
| தேசிய கல்வி உரிமை தினம் | - | செப்டம்பர் ஐந்து |
| குடியரசு தினம் | - | ஜூன் முப்பது |
| சுதந்திர தினம் | - | நவம்பர் பதினான்கு |
| வன தினம் | - | பிப்ரவரி இருபத்தி ஒன்று |
| உலக முதிர்யோர் தினம் | - | ஆகஸ்ட் பதினைந்து |

**சிறப்புத்தினங்கள் பற்றி உங்களுக்குத் தெரிந்தவற்றைக் கூறுங்கள்.**

**படித்துப் பாருங்கள்.**

- மயில் ஒரு பறவை
  அது அழகாக நடனமாடும்
  இது நமது தேசியப் பறவை ஆகும்.
  ஆண் மயிலுக்கு மட்டுமே தோகை உண்டு.
  இது புழு, பூச்சிகள், தானியங்களை உண்டு வாழும்.

- இதுபோன்று காகம், கிளி பற்றி எழுதுங்கள்.



- __________________________________

- __________________________________



**பத்து பொருள்களின் படங்களைச் சேகரியுங்கள். அகர வரிசைப்படி ஒட்டுங்கள். ஒவ்வொரு பொருளின் சிறப்பு பற்றி நான்கு வரிகளில் எழுதுங்கள்.**

# சொல்லகராதி

**அ**

அவை - சபை
அறவாழ்வு - நியாயமான வாழ்வு

**ஆ**

ஆவல் - ஆசை

**இ**

இல்லம் - வீடு
இறுமாப்பு - கர்வம்

**ஈ**

ஈனமான - இழிவான

**உ**

உவகை - மகிழ்ச்சி

**ஊ**

ஊன் - இறைச்சி

**ஒ**

ஒல்லும் - முடிந்தளவு

**ஓ**

ஓம்புவான் - காப்பாற்றுவான்
ஓவாதே - செய்யாதே

**க**

கொடை - வழங்குதல்

**ச**

சன்மானம் - வெகுமதி
சாதுர்யம் - திறமை
சிருஷ்டி - படைப்பு
சீண்டி - தொட்டு
சீராக - ஒன்றுபோல
சுவடி - ஏடு

**த**

தணிந்து - தாழ்ந்து நீங்கி
தணியும் - நீங்கும், மறையும்
தர்மம் - அறம்

**ந**

நிதானம் - மெதுவாக
நெக்குவிடும் - பிளந்துவிடும்
நெட்டிருப்பு- இரும்பு
நுணுக்கம் - துல்லியம்

**ப**

பாழ்படுதல் - வீணாதல்
புலமை - அறிவு
புனைந்து - ஆக்கி, செய்து
பூசல் - சண்டை
பேணுதல் - காப்பாற்றுதல்

**ம**

மகத்தானது - சிறப்பானது
மாய்க்க - ஒடுக்க
மெத்தனவை - இனியசொற்கள்
மெய்ப்பொருள் - உண்மையான பொருள்

**ய**

யூகமாய் - உத்தேசமாய்

**வ**

வடு - தழும்பு
வணிகர் - வியாபாரி
வம்பு - வீண்பேச்சு, வீண்செயல்
வாசம் - மணம், தங்குதல்
வாதம் - சொற்போர்
விடுதி - தங்குமிடம்
விந்தை - வியப்பு
வியப்பு - ஆச்சரியம்
விழைவு - விருப்பம்
வினவினார் - கேட்டார்
வெட்கி - நாணப்பட்டு
வெட்டனவை - வன்சொற்கள்
வைகல் - தினம்